Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 53/2016**

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | செந்தில்வேல் பெருமாள் | வட்டம் | - | |
| த/பெ | - | வள்ளிநாயகம் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | நல்லூர் காவல் நிலையம் | வயது | - | |
| சாதி | - | | | | |

**26.10.2023**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்பொழுது நல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். கடந்த 26-08-2016 அன்று வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து 18.30 மணிக்கு கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அக்காமலையை சேர்ந்த சீவிதாதேவி என்பவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்து காவல் நிலையம் வந்து வால்பாறை காவல் நிலைய குற்ற எண் 150/2016 இத.ச பிரிவுகள் 294(b), 324, 436 -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ 7, 8 ஆகும்.

2. அந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலுடன் வாதியின் புகாரை இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் வால்பாறை அவர்களுக்கு அனுப்பிவைத்தேன் பின்பு வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27-08-2016 அன்று காலை 7.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் சரவணன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.9,10 ஆகும். அந்த பார்வை மகஜரில் சாட்சிகள் இருவரிடமும்

கையொப்பம் பெற்றேன்.

3. சம்பவயிடத்தின் அருகில் எதிரி விட்டுச்சென்ற சுமார் 37 செ.மீ நீளமும் அதில் சுமார் 12 செ.மீ பிளாஸ்டிக் கைப்பிடியுடன் சுமார் 4 செ.மீ அகலம் கொண்ட இரும்பால் ஆன அருவாள் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அதே சாட்சிகள் சரவணன் மற்றும் மாரிமுத்துடன் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.11 ஆகும்.

4. பின்னர் சம்பவயிட சாட்சிகள் ஜான்சன், சரவணன், மாரிமுத்து ஆகியோர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடி சென்று தகவலாளி கொடுத்த தகவலின் படி கருமலை எஸ்டேட் பஸ்டாப் முன்பு 27-08-2016-ம் தேதி 11.00 மணிக்கு எதிரியை கைதுசெய்து எதிரியிடம் கைதுக்கான காரணம் கூறி 11.30 மணிக்கு எதிரியை காவல் நிலையம் அழைத்துவந்து பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

5. அதன்பின்னிட்டு சாட்சிகள் கவிதா, பிரேமா, ஜெயலட்சுமி ஆகியோர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தும் வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 324, 436 இதசவில் இருந்து 294(b),324, 435, 448 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழ் சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து குற்றவியல் நடுவர் வால்பாறைக்கு அனுப்பிவைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆகும்.

6. பின்பு வழக்கில் காயம்பட்ட ஜீவிதாதேவிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் துவாரகேஸ் அவர்களிடம் வாதிக்கு ஏற்பட்ட காயம் பற்றி காயச்சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.13 ஆகும்.

7. பின்பு வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),324, 435, 448 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை